21.08.2025

CC No.162/2024

**ம.சா.1 அன்பு மெய்யப்பன், த/பெ. கைலாசம்.**

**குறுக்கு விசாரணை**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும் இந்த வழக்கில் சொல்லியுள்ள விபரங்களை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் பொறியாளர். இவ்வழக்கில் சொல்லியுள்ள பாக்கியநாராயணன் என்பவர் யார் என்றால் எனது தம்பி ஆவார். என் தம்பிக்குத்தான் பொறியாளர் கட்டிடம் கட்டி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கட்டிடம் யார் பெயரில் உள்ளது என்றால் பாக்கியநாராயணனிடம் கேட்டால்தான் தெரியும். சீரமைப்பு பணி செய்யக்கூடிய கட்டிடம் யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. பாக்கியநாராயணன் என்பவர் எதிரியை என்னிடம் அறிமுகம் செய்துவைத்தார் என்றால் சரிதான். நான் எனது புகாரில் எதிரியை பாக்கிநாராயனனுக்கு நான்தான் அறிமுகம் செய்து வைத்தேன் என்று குறிப்பிட்டிருந்தால் தவறுதான். எதிரிக்கு எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் என் தம்பிக்குதான் தெரியும். அவர்தான் என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

2) பண பரிவர்த்தனை எந்த வங்கி கணக்கில் நடைபெற்றது என்றால் எனது தம்பி கணக்கு மற்றும் என் தம்பி மனைவியின் கணக்கில் இருந்து எதிரி கணக்கிற்கு செலுத்தப்பட்டது. மேற்படி வங்கி பரிவர்த்தனையை நிரூபிக்க ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தை தற்போது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கண்ணன் என்பவர் மூலமாகத்தான் எதிரிக்கு பாக்கியநாராயணனை தெரியும் என்று சொன்னால் சரியல்ல. கட்டிட வேலை நடைபெறும்போது எதிரிக்கும் பாக்கியநாராயணனுக்கும் மனகசப்பு ஏற்பட்டது என்றால் சரிதான், எதிரி குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டிட வேலையை முழுமையாக முடிக்காத

காரணத்தால் என் தம்பி என் பெயருக்கு காசோலை தருமாறு சொல்லிவிட்டு வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார். இந்த வழக்கை நடத்துவதற்கு என் சகோதரர் எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. காசோலை எனது பெயரில் இருப்பதால் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு காசோலை எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டதால் தேதி நினைவில்லை. எதிரி காசோலை கொடுக்கும்போது தொகை மற்றும் தேதி குறிப்பிட்டு பெயர் எதுவும் குறிப்பிடாமல் கையெழுத்து மட்டும் போட்டு கண்ணன் வசம் ஒப்படைத்தார் என்று சொன்னால் சரியல்ல.

3) எனது அறிவிப்பு மற்றும் மனுவில் 18.06.2024 ம் தேதியன்று பஞ்சாயத்து பேசி கண்ணன் மூலமாக வழக்கு காசோலை பெறப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலையில் தொகை திருத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 18.07.2024 ம் தேதிக்குள் கட்டிடவேலையை முடித்துவிட்டு காசோலையை கேட்டபோது அதை பாக்கிநாராயணன் என்பவர் எங்கு வைத்தேன் என்று தெரியவில்லை என்ற காரணத்தினால் காசோலையை திருப்பி தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணம் எந்த காரணத்திற்காக திருப்பட்டது என்றால் காசோலை வரைவாளர் பணத்தை நிறுத்திவைத்துள்ளார் என்று திருப்பட்டுள்ளது. என் தம்பி காசோலையை கொடுக்கமறுத்தால்தான் எதிரி stop payment அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. நானும் என் சகோதரரும் கட்டிடவேலை முடிப்பதற்காக காசோலையை கண்ணன் என்பவர் மூலமாக பெறும்போது TN 63 BV 3147 jupitar வண்டியையும் சேர்த்து எங்கள் வசம் வைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் தொடர்பாக தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். **அந்த புகார்மனு ரசீது எ.சா.ஆ.1 ஆகும்.**

4) நானும் என் சகோதரரும் கட்டிடவேலை முடிந்த பின்பும் எதிரி கொடுத்த காசோலையையும் அவரது வண்டியையும் திருப்பி தராமல் தொடர்ந்து கூடுதல் பணம் கேட்டு வந்தோம் என்றால்

சரியல்ல. கட்டிடவேலைக்காக யாரும் வண்டியை தாமாக முன்வந்து ஒப்படைக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல எதிரி என்னிடம் எழுதிக்கொடுத்து ஒப்படைத்தார். வண்டி யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எதிரி கட்டிடவேலை செய்ய வந்தபோது அவர் ஓட்டி வந்த வண்டியை நான் பறித்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவரேதான் ஒப்படைத்தார் அதற்கான CC TV பதிவுகள் உள்ளது. அவர் வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தருவதாக என்னிடம் எழுதிக்கொடுத்துள்ளார். என் சகோதரரும் எதிரியும் கட்டிடம் தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொண்டார்களா என்றால் செய்து கொண்டார்கள். எனக்கு எதிரி மற்றும் என் சகோதரருக்கும் இடைபட்ட பரிவர்த்தனை தெரியாது என்றாலும், எதிரி எவ்வித மறுபயனும் செலுத்த கடன்பட்டவர் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.21 13:29:47 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)